**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.039/ஆ5/2023, நாள். 13.01.2023**

.....

பொருள் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையட்டுப் போட்டிகள் 2022–2023 (TamilNadu Chief Miniser's Trophy Games 2022–2023) – பள்ளிகள் மாணவ மாணவியர்கள், அரசு ஊழியர்கள் மற்றும் மாற்றுத்திறனாளர்கள் ஆகிய பிரிவினருக்கு மாவட்ட அளவிலான போட்டிகளை ஜனவரி மற்றம் பிப்ரவரியில் நடத்துதல் – சிறப்பு மெகா முகாம் விளையாட்டுத் துறை சார்பாக 14.01.2023 முதல் 17.01.2023 வரை வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் அனைத்து நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறவுள்ளதை – தகவல் தெரிவித்தல் – சார்பு

பார்வை
1. அரசாணை நிலை எண். 88, (இளையர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் (எஸ்1) துறை நாள். 19.12.2022
2. திருமதி நோயலின் ஜான், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், முத்தமிழறிஞர் டாக்டர் இளைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டு அரங்கம் காட்பாடி வேலூர் கடித ந.க.எண்.192/2022, நாள். 02.01.2023 மற்றும் 11.01.2023

.....

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி தமிழ்நாடு முழுவதும் பல்வேறு வயதுப் பிரிவினருக்கு விளையாட்டுப் போட்டிகளுக்கான முக்கியத்துவம் மற்றும் அதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியரின், பொது மக்கள், அரசு ஊழியர்கள் மற்றும் மாற்றுத்திறனாளர்கள் ஆகிய 5 பிரிவுகளில் ஆண் பெண் இருபாலரும் பங்கேற்கும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் 2022–2023–ல் பங்கேற்க இணையதளத்தில் பதிவு செய்வதற்கான கடைசி நாள். 17.01.2023 ஆகும்.

இப்போட்டிகளில் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டு வீரங்கள் அனைவரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய இணையதளம் (www.sdat.tn.gov.in) வாயிலாக வீரர்களின் குழு மற்றும் தனிநபர்களின் அனைத்து விவரங்களை முன்னதாகவே பதிவு செய்தி வேண்டும். **நேரிடையாக போட்டிகளில் பங்கேற்க இயலாது.** போட்டிகள் ஜனவரி மாதம் மூன்றாவது வாரத்தில் துவங்கி நடதப்படவுள்ளன. இப்போட்டிகளில் பதக்கம் பெறும் அனைவருக்கும் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

இதற்கான இணையதளத்தில் பதிவு செய்வதற்கான சிறப்பு மெகா முகாம் விளையாட்டுத் துறை சார்பாக 14.01.2023 முதல் 17.01.2023 வரை வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் அனைத்து நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறவுள்ளது. வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வகை பள்ளிகள், அரசு ஊழியர்கள் மற்றும் மாற்றுத்திறனாளர்கள் ஆகியோர் இந்த சிறப்பு முகாமில் கலந்துக்கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ள தங்களது பெயர்களைப் பதிவு செய்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.3000/- இரண்டாம் பரிசாக ரூ. 2000/-, மூன்றாம் பரிசாக ரூ. 1000/- வழங்கப்படவுள்ளது.

போட்டிகள் நடைபெறும் இடம், தேதி மற்றும் நேரம் குறித்த விவரங்கள் குறுஞ்செய்தி மூலம் தாங்கள் பதிவு செய்த அலைபேசி எண்ணிற்கு அனுப்பப்படும் என பார்வை 2-ல் காண் 11.01.2023 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இப்போட்டியில் கலந்துக் கொள்ளும் வகையில் அனைத்து வகை பள்ளிகளில் பயிலும் 12 முதல் 19 வயது வரை உள்ள மாணவர்கள், மற்றும் இப்போட்டியில் கலந்துக் கொள்ள விரும்பும் ஆர்வமுள்ள தங்கள் பள்ளியில் பணிபுரியும் அரசு ஊழியர்கள், மற்றும் அரசு அலுலகங்களில் பணிபுரியும அரசு ஊழியர்கள் கலந்துக் கொள்ள ஏதுவாக மேற்கண்ட முகாமில் கலந்துக்கொண்டு தங்களது பெயர்களைப் பதிவு செய்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது மேலும் இப்பொருள் சார்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இப்பொருள் சார்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலைக் கல்வி) (தனியார் பள்ளிகள்) மற்றும் (தொடக்கக் கல்வி) தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலரை 7401703483 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

//ஒப்பம்//
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் -

1. அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம்.

நகல் -

1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலைக் கல்வி)
2. மாவட்டக் கல்வி அலுவலர் (தனியார் பள்ளி)
3. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி)
4. வட்டாரக் கல்வி அலுவர்கள், (மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) மூலமாக)
   (மேற்காண் அலுவலர்கள் இப்பொருள் சார்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு அனுப்பப்படுகிறது. ) (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
5. திருமதி நோயலின் ஜான்,
   மாவட்ட விளையாட்டு (ம) இளைஞர் நல அலுவலர்,
   முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டு அரங்கம்,
   காட்பாடி, வேலூர் - 632 014.